1982 பிப்ரவரி 16]

பொதுப்பணித் துறை அமைச்சுப் பணியாளர்களுக்கான பதவி உயர்வு

* வினா எண் 199 —திரு. எஸ் ஆண்டித்தேவர் : மாண்புமிகு கதர், பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பொதுப்பணித்துறையில் பணிபுரியும் அமைச்சுப் பணியாளர்களுக்குப் பதவிஉயர்வுக்கு வாய்ப்பின்மையை கருதி தற்போது கோட்டங்களில் பணிபுரியும் மத்திய அரசு கோட்ட கணக்கர்களுக்குப் பதிலாக பொதுப்பணித்துறையில் பணிபுரியும் அமைச்சுப் பணியாளர்களுக்கு இப்பதவியைக் கொடுக்க நிர்வாக சீர்திருத்தக் குழு (Administrative Reforms Commission) பரிந்துரை செய்துள்ளதை அரசு ஒப்புக்கொண்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : (அ) ஒப்புக் கொண்டுள்ளது.

(ஆ) இச்செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளது.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு இந்த திட்டத்திற்காக ஒப்புக் கொண்டதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாகவே ஒரு துறையை நியமித்தல் என்று சொன்னால், அந்தத் துறையிலேயே ஆடிட் துறை—அதாவது தணிக்கைத் துறையும் இருக்கும். அதுதான் முறை. ஆகவே இப்படிமாற்றப்படுவதற்காக எவ்வளவு சீக்கிரத்தில் இவைகளை முறைப்படுத்த முடியுமோ, அவ்வளவு விரைவில் வேலைகளை ஆரம்பிக்க அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்துறையில் உள்ள பணியாளர்கள், கணக்கு வேலைகளை கவனிக்க இயலும் வகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப் படலாம் என்று சீர்திருத்த ஆணைக் குழுவின் பரிந்துரைகள் இருக்கிறது. இதை பரிசீலனை செய்து, அது கேட்டுக் கொண்டதற்கு இணங்க 3–12–1981 அன்று தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள கணக்கு ஆய்வுத் தலைவர், நிர்வாக சீர்திருத்த ஆணைக் குழுவின் மேற்கொண்ட பொருள் குறித்த பரிந்துரையை ஏற்றுக் கொள்வது குறித்து மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று தெரிவித்துள்ளார். ஆகவே, பொதுப்பணித்துறை செயலரும், நிதித்துறை செயலரும் மாநில கணக்காய்வுத் தலைவரோடு பேசி முடிவு எடுக்கலாம் என்று தற்போது முடிவெடுக்கப்பட்டுள்ளது.